Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

டெர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மாசி மீ 20 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 22 (04-03-1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:91

தொழிற் பயிற்சி
RADIO, T.V.DECK REPAIRING, QUANITY SURVEYORING, DRAUGHTSMANSHIP, WIRING, WINDING.
JAFFNA Technical Institute.
52/1, Stanley Road, JAFFNA.

COMPUTER PROGRAMMING
(BASIC, COBOL)
50 மணித்தியால செய்முறைப் பயிற்சி அச்சிடப்பட்ட பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
ஆரம்பம்: 8-3-86
காலை 9 a.m.
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, Stanley Road, JAFFNA.

## ★ நயினாதீவில் பயங்கரம்

# கடற்கண்ணி தாக்குதலில் கப்பல் சிதறி மூழ்கியது!

## சிப்பாய்களின் பிரேதங்களை கடற்படையினர் தேடுகின்றனர்

## தீவுப்பகுதி போக்குவரத்து நிறுத்தம்

— உதயன் அலுவலகச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், மார்ச் 4

நயினாதீவில், கடற் கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கைக் கடற்படைக் கப்பல் ஒன்று நேற்றுச் சிக்கி சிதறி கடலில் மூழ்கியது.

இலங்கைக் கடற்படைச் சரித்திரத்தில் இடம் பெற்ற பயங்கரமான முதலாவது கடற் கண்ணி வெடித் தாக்குதல் இது என்று சொல்லப்படுகிறது.

நேற்றுப் பகல் 12–30 மணியளவில் நடந்த இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடற்படைக்குரிய 118 ஆம் இலக்க கப்பல் நயினாதீவு முகாமில் உள்ள சிப்பாய்களுக்கு, காரைநகர் முகாமில இருந்து நண்பகல் உணவு எடுத்துச் சென்று கொண்டு இருந்தது.

நயினாதீவுக் கடலில் வைக்கப்பட்டிருந்த கடற்கண்ணி வெடிக்கு கப்பல் சிக்கியது. பல்வேறு துண்டுகளாகச் சிதறிய அக்கப்பல் கடலில மூழ்கியது.

சம்பவம் நடந்த சமயம் கப்பலில் 17 பேர் சென்று கொண்டு இருந்ததாகக் கூறப்படுகிறது.

### தேடுதல்

சிக்கி இறந்தவர்களின் பிரேதங்களைத் தேடுவதில் கடற்படையினர் ஈடுபட்டு இருந்தனர்.

சடலங்களின் பகுதிகள் தேடுதலின் போது பொறுக்கி எடுக்கப்பட்டு காரைநகர் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

பல கடற்படை சிப்பாய்கள் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது

### துப்பாக்கி வேட்டு

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கடற்படைச் சிப்பாய்கள் நயினாதீவு முகாமில் இருந்து புங்குடுதீவு- குறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி:

## இரவிரவாக தீவிர தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நயினாதீவு, புங்குடுதீவு பகுதிகளில் நேற்றிரவு தீவிரதேடுதல் நடந்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவமும் கடற்படையும் கூட்டுச் சேர்ந்து இரவிரவாக வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர்.

அவ்வேளை பலர் கைது செய்யப்பட்டு, முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் அறிய வருகிறது

வீட்டில் உள்ளவர்களை வெளியே வருமாறு உத்தரவிட்டுத் தேடுதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அப்பகுதிகளில் இரவிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற் கண்ணியில்

# 12 கடற்படையினர்

## மாண்டதாக புலிகள் அறிவிப்பு

சென்னை, மார்ச்.3

இலங்கைக் கடற்படையினருக்குச் சொந்தமான கப்பல் ஒன்று கடற்கண்ணி வெடிக்குச் சிக்கி சுக்கு நூறாகியது.

12 கடற் படையினர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

தமிழீழ தமிழீழ விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தினர்.

இப்படி விடுதலைப் புலிகள் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தனர்.

118 இலக்கம் கொண்ட கடற்படைக் கப்பல், நயினாதீவு கடற்படை முகாமில் உள்ளவர்களுக்கு காரைநகர் முகாமில் இருந்து உணவு கொண்டுவந்த சமயம் கடற்கண்ணி வெடிக்கு சிக்கிச் சிதறிச் சுக்கு நூறாகியது.

அதிஉயர் அதிகாரி ஒருவரும் இச் சம்பவத்தில் கொல்லபபட்டார். கப்பலில் இருந்த பெருமளவு ஆயுதங்கள் உணவுப் பொருள்கள் அனைத்தும் நீரில் மூழ்கின.

நேற்று பகல் 12-30 மணியளவில் நயினாதீவுக்கும் இறுப்பிட்டிக்கும் இடையில இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## பம்பைமடுவில் ஹெலிக்கொப்டர் சேதம் என அறிவிப்பு

சென்னை, மார்ச் 3

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஹெலிக்கொப்டர் ஒன்று சேதமடைந்தது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளனர்.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

பம்பைமடுக் கிராமத்தை இன்று திங்கட்கிழமை வவுனியா, செட்டிகுளம் இராணுவ முகாம்களில் இருந்து சென்ற 150 இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர்.

இதற்கு உதவியாகப் பறந்த 5 ஹெலிக்கொப்டர்களில் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சேதமடைந்தது.

## தோட்டத் தொழிலாளி வெட்டிக் கொலை

### பொகவந்தலாவையில் பதற்றம்

கொழும்பு, மார்ச் 4

பொகவந்தலாவையில் கிறிம்வில் தோட்டத்தில் தமிழ் தோட்டத் தொழிலாளர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

மேற்பார்வையாளராகப் பணிபுரியும் இவரின் பெயர் கிருஷ்ணராஜா, வயது 45.

இதனிடையில் கடந்த வெள்ளிக்கிழமை பொகவந்தலாவையில் உள்ள தமிழ் ஆரம்ப பாடசாலையை எரிக்க முயற்சி நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் பொகவந்தலாவைப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது

### சுபநேரம்

04 - 03 - 1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10-57 முதல் 12-27 வரை
ராகுகாலம்:
3.27 முதல் 4.57 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
நவமி பின்னிரவு 4 14

# சிங்கராயர் விடுதலை

## வண. பிதா சின்னராசாவும் சுற்றவாளி எனத் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 4

வண. பிதா ஆபரணம் சிங்கராயர், வண. பிதா சின்னராசா ஆகியோர் சுற்றவாளிகள் என்று கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயகா நேற்றுத் தீர்ப்பளித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இருவர் மீதும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மட்டக்களப்புச் சிறைச்சாலை உடைப்பில் தப்பியவர்களில் ஒருவர் வண. பிதா சின்னராசா.

அவரின்றியே அவர் மீதான வழக்கு விசாரணை நடந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீர்வேலி வங்கிக் கொள்ளை சம்பந்தமான தகவல்கள் தெரிந்து இருந்தும் அது பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கத் தவறியமையே இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும்.

இக் குற்றச் சாட்டுக்களை நிரூபிக்க அரச தரப்பினர் தவறி விட்டனர் என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்

வண. பிதா சிங்கராயர், பொலீஸ் அதிகாரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அவர் சிறைக் காவலில்

கொழும்பு, மார்ச்.4

நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பான வழக்கில் விடுதலையான வண. பிதா ஆபரணம்சிங்கராயர், மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டார்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாக வழக்கு ஒன்றில் வண பிதா சிங்கராயர் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

இந்த வழக்கு ஏப்ரல் 3ஆம் திகதி விசாரணைக்கு வர இருக்கிறது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தாக்குதல்பற்றித் தகவல்கள் தெரிந்து இருந்தும் அவற்றை அதிகாரிகளிடம் வெளியிடத் தவறியதாக வண பிதா சிங்கராயர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ஸ்ரீலங்கா, தமிழீழ மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கும்வரை போராட்டம் ஓயமாட்டாது

### விடுதலைக்குப் பின் வணபிதா

கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் ஸ்ரீலங்கா மக்களும், தமிழ் ஈழமக்களும் வாழ்கின்றனர்.

அவர்கள் இருசாராருக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கும்வரை போராட்டம் ஓயாது.

நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பான வழக்கில் விடுதலையான வண. பிதா. சிங்கராயர் தன்னைச் சூழ்ந்து கொண்ட செய்தியாளரிடம் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ் ஈழப் போராட்டம் நடத்தியவர்கள் மார்க்ஸீய தீவிரவாதிகள் அல்லர் அவர்கள் சுதந்திரப் போராளிகள் ஆவர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

இச் சட்டத்தின் கீழ் சிங்கள இளைஞர்களும் இப்பொழுது கைது செய்யப்படுகின்றனர்.

நான் ஒரு மதகுரு என்றளவில் சில காரியங்களைச் செய்திருக்கிறேன்

பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றி உலகறியச் செய்திருக்கின்றேன்.

இப்படி வண. பிதா. சிங்கராயர் சொன்னார்.

# வலிவடக்கு பகுதியில் குண்டு வீச்சு, வேட்டு!

— உதயன், பலாலி, காங்கேசன்துறை, சுன்னாகம் செய்தியாளர்கள் —

பலாலி, மார்ச் 4

நேற்றுக் காலை பத்து மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதியின் பல இடங்களில் ஹெலிக்கொப்டரிலிருந்து பாரிய குண்டுகள் வீசப்பட்டன. பல இடங்களில் குண்டு மாரி தொடர்ச்சியாகப் பொழியப்பட்டதாம்

தாழப்பறந்து ரோந்து சுற்றிய ஹெலிக்கொப்டர்களினால் வலி வடக்கு பிரதேசத்தின் சுமார் முக்காற்பங்கு பதறி அடங்கியது. அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் நிலவியது.

வறுத்தலைவிளான், தெல்லிப்பளை, கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதி, வறுத்தலைவிளான், கட்டுவன், சித்தியம்புளியடி கிராமம் ஆகியவற்றிலும் —

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலும் பாரிய குண்டுகள் விழுந்து வெடித்து அதிர்ந்தன.

மயிலிட்டி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதியில் தாழப்பறந்த ஹெலிக்கொப்டர்களினால்மக்கள் பீதியடைந்து ஓடி ஒளித்தனர்.

### நடைபவனியில்

நேற்றைய சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

காலை 10 மணியளவில் பலாலி விமான நிலையத்தினூடாக இராணுவத்தினர் நடைபவனியாக கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு வந்தனர். வயாவிளான், தெல்லிப்பளை வீதியில் உள்ள மயிலிட்டிச் சந்திக்கு அண்மையில் வந்த இராணுவத்தினர்; அவ்விடத்தில் மறைவிடங்களுக்குள் பதுங்கியிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

### மேலிருந்து சூடு

அப்போது சிவப்புநிற ஹெலிக்கொப்டர் ஒன்று அவர்களுக்கு பாதுகாப்பளிப்பது போல் தாழப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### நாவற்குழி கைதடியிலும்....

நல்லூர், மார்ச் 4

நாவற்குழி, கைதடி, கோப்பாய்ப் பகுதிகளில் நேற்று ஹெலிக்கொப்டர் விமானம் ஒன்று தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது

ஞாயிற்றுக்கிழமை தகர்க்கப்பட்ட கோப்பாய்—கைதடி தாம்போதியைத் திருத்தச் சென்றவர்கள் மீதும் ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

## “தஹா”வுக்கு அமைச்சர்பதவி?

கொழும்பு, மார்ச்.4

காலி எம். பி.யான டாக்டர் விஜயானந்த தஹநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம்.

விரைவில் செய்யப்படவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் பதவி டாக்டர் தஹநாயக்காவுக்கு வழங்கப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

டாக்டர் தஹநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்குவது, நடைபெறவிருக்கும் அக்மீமன இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்றுகூறப்படுகின்றது.

காலி தொகுதிக்கு அருகில் உள்ளது அக்மீமன என்பது குறிப்பிடத்தக்கது.



பாத்தியோ, பாத்தியோ!

எலச்ஷன் வெல்லுறதுக்காக மந்திரிசபையை மாத்தப் போகினம், நாட்டின்ரை முக்கிய பிரச்சினையளைப் பற்றி அவைக்கென்ன கவலை . . . !

### விமான விபத்து எண்மர் பலி

ஜெனீவா, மார்ச் 3

சுவிட்ஸிலாந்தில் இடம் பெற்ற விமான விபத்து ஒன்றில் விமான ஓட்டி உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்.

சுவிட்ஸிலாந்திலிருந்து பேர்லினுக்கு புறப்பட்ட இந்த தனியார் விமானம் நிலத்திலிருந்து கிளம்பிய கையோடு விபத்துக்குள்ளானது.

### பிலிப்பீன்ஸில் மோதல் 19 பேர் மரணம்

மணிலா, மார்ச் 3

பிலிப்பீன்ஸின் மத்திய மாகாணத்தில் அரச படையினருக்கும் அரச விரோத கெரில்லாக்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதலில் 14 பொலீஸாரும், ஒ இராணுவ வீரரும், நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

30 பொலீஸாரும் 14 பொதுமக்களும் இந்த மோதலில் காயமடைந்தனர்.

### சிங்கள இளைஞர் சுட்டுக் கொலை

திருகோணமலை, மார்ச் 4

முதலிக்குளத்தில் ரணசிங்கா சந்திரரத்தின என்ற 32 வயது சிங்கள இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலிக்குளத்தைச் சேர்ந்த இருவர் கடத்திச் செல்லப்பட்டதாகவும் ஒருவரே கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

போராளிகள் தான் இச் செயலைச் செய்தாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

### இளைஞர்கள் பூஸாவுக்கு

திருகோணமலை, மார்ச் 4

திருகோணமலை ஆயுதபடை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் 40 பேர் நேற்று பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமல், ஸ்ரீதேவியைப்போல் ஷாலினி புகழ்பெறுவாள்

குழந்தை நட்சத்திரமாக இருந்து பிரபலமான கமலஹாசன், ஸ்ரீதேவியைப்போல, ஷாலினியும் புகழடையப்போவது உறுதி

பேபி ஷாலினியின் நடிப்புத் திறமையைப் பார்த்து இப்படிக் கூறுகிறார் நடிகை விஜயகுமாரி.

விஜயகுமாரி இது பற்றிக் குறிப்பிடுகையில்,

சாஜ் புரொடக்ஷன் ஸாரின் 'நிலவே மலரே' படப்பிடிப்பு என்வீட்டில் நடந்தது. நான் பொதுவாகப் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குப் போவதில்லை.

அன்று பேபி ஷாலினிக்கு வயதான பாட்டிவேடம். அவள் நதியாவுக்கு பூ வைக்கும் சீன்.

ஷாலினியின் தந்தை என்னிடம் அவளை அறிமுகம் செய்து வைத்தார். அதுமுதல் குழந்தை 'ஆண்ட்டி, ஆண்ட்டி' என்று என்னிடம் பாசத்துடன் ஒட்டிக்கொண்டது.

எனக்கு அன்று ஓர் அலாதி மகிழ்ச்சி.

படப்பிடிப்பு ஆரம்பித்ததும் என்னையும் வலுக்கட்டாயமாக மாடிக்கு அழைத்துச் சென்றாள் ஷாலினி;

டைரக்டர் சந்திர சேகர் ஒரு கெமெராக் கோணத்தைப் பற்றி அவளிடம் சொன்னார்.

'இப்படித் தானே சார், நடிச்சுடறேன்' என்று அவள் சட்டென்று அங்கேபோய் நின்ற விதமும் கொடுத்த போஸையும் பார்த்து அனைவரும் அசந்துபோய் விட்டோம்.

அந்த நிமிடமே அவளின் திறமையைக் கணித்துவிட்டேன். குழந்தை நட்சத்திரமாக இருந்து பிரபலமான, கமல் ஸ்ரீதேவியைப்போல், ஷாலினியும்விரைவில்அகிலஇந்தியாவிலும் புகழடையப்போவது உறுதி.

படப்பிடிப்பு முடிவடைந்தபோதும் இன்னமும் ஷாலினி அடிக்கடி போன் செய்து பேசுகிறாள்.

அவளது திறமையைப் பாராட்டி பல பரிசுப் பொருள்களைக் கொடுத்தேன், என்றார் விஜயகுமாரி.

தினசரி சினிமா

# பாரத தென் கொரிய நல்லுறவு வளரும்

## பாரதம் வந்துள்ள பிரதமர் சிங் - யோங்-லூ நம்பிக்கை

புதுடில்லி, மார்ச். 3

பாரத - தென் கொரிய குடியரசுக்கிடையேயான நல்லுறவு பேணப்படும்.

இவ்வாறு 4 நாள் அரசு முறைப்பயணம் மேற்கொண்டு பாரதம் வந்துள்ள தென் கொரிய குடியரசுப் பிரதமர்சிங்-யோங்-லூ தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கருத்து வெளியிட்டார்.

பாரத வெளியுறவு அமைச்சர் பலேராம் பகத் பிரதமர் லூவை விமான நிலையத்தில் சென்று வரவேற்றார்.

பிரதமர் லூ பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்து பேசுகையில்;

பாரதத்துக்கும் தென் கொரியக் குடியரசுக்கும் இடையேயான வர்த்தக பொருளாதார உறவுகள் விருத்தியடைய வழிமுறைகள் காணப்படும்

இந்த விடயங்கள் தொடர்பாக என்னுடன் வந்துள்ள தெ. கொரிய வர்த்தக பொருளாதார நிபுணர் குழு பாரதக் குழக்களுடன் விரிவான பேச்சுக்களை நடத்தும் என்றார்.

பிரதமர் ராஜீவ்காந்தியையும் ஜனாதிபதி கியானி செயில் சிங்கையும் அவர்சந்திக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

## மார்க்கோஸுக்கு பாதுகாப்பு

### அமெரிக்க இரகசிய சேவை பிரிவு வழங்கும்

ஹொனலுலு, மார்ச். 3

பதவி இறக்கப்பட்ட பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸுக்கு அமெரிக்க இரகசிய சேவைப் பிரிவு பாதுகாப்பு வழங்கும்.

இந்த உத்தரவை ஜனாதிபதி றேகன் வழங்கியுள்ளார்.

ஹொனலுலு நகர மேயர் மார்க்கோஸுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்க மறுத்ததை அடுத்தே ஜனாதிபதி றேகன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு வழங்க மறுத்த மேயர் கருத்துக் கூறிய பொழுது தனது பாதுகாப்புக்காகப் பணம் செலவிடக் கூடிய அளவுக்கு அவர் பணம் படைத்தவர் என்றே நான் கருதுகிறேன், என்றார்.

## ஈராக் - ஈரான் பரஸ்பரம் குற்றச்சாட்டு

தெஹ்ரான், மார்ச் 3

குர்திஸ்தான் பகுதியிலுள்ள பன்னிநகர்ப் பகுதியில் குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக் மீது ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் கைப்பற்றியுள்ள பாவ்தீவாத் தென் பகுதியில் தனது படை முன்னேறியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

இதனிடையே பொது மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் பன்னி நகர்ப்பகுதிகளை ஐ. நா. சபை விசேட குழு ஒன்று பார்வையிட்டு வருவதாக ஈரான் அறிவித்துள்ளது.

## பங்களாதேஷ் பொதுத்தேர்தல்

### ஏப்ரல் 26இல் என எர்ஷாட் அறிவிப்பு

டாக்கா, மார்ச் 3

பங்களாதேஷ் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26-ந் திகதி நடைபெறும்.

இவ்வாறு ஜனாதிபதி எர்ஷாட் வானொலி உரையொன்றில் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை பங்களாதேஷ்தேர்தல்ஆணையாளர் மேலும் உத்தியோகபூர்வமாக உறுதி செய்துள்ளார்.

பங்களாதேஷின் 330 தொகுதிகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெறுமெனவும் இம்மாதம் 25ஆம் திகதி வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவாமிலீக் தலைமையிலான பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு அணிகளை நடத்தி வருகின்றன.

பங்களாதேஷில் இராணுவச்சட்டத்தை நீக்கிவிட்டே தேர்தல் நடத்தப்படவேண்டுமென எதிரணிகள் வற்புறுத்திவருவது தெரிந்ததே.

எதிரணிகள் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி எர்ஷாட் தேர்தல் முடிவுக்குப்பின் இராணுவச் சட்டம் நீக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

வெளி உலகில்

## பிலிப்பீன்ஸ் மக்களுக்கு சிவில்உரிமைகள்

### வழங்கப்படும் என்கிறார் திருமதி அக்கியூனோ

மணிலா, மார்ச். 3

பிலிப்பீன்ஸில் ஜனாதிபதி மார்க்கோஸ் காலத்தில் வழங்கப்படாதிருந்த சிவில் உரிமைகள் பல மக்களுக்குவழங்கப்படும்.

மேற்கண்டவாறு பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி. அக்கியூனோதெரிவித்துள்ளார்.

மணிலாவில் நடந்த மக்கள் பேரணியொன்றில் உரையாற்றிய போது இந்த உறுதிமொழி அவரால் வழங்கப்பட்டுள்ளது.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் உறவினர் செல்வாக்கு போன்ற விரும்பத்தகாத விடயங்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்படும்.

பிலிப்பீன்ஸில் கடந்த 20 ஆண்டுகளாக இந்த மோசமான நிலை இருந்து வந்திருக்கிறது.

இந்த நிலையை மாற்றி பிலிப்பீன்ஸில் பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் கட்டியெழுப்ப முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

ஆட்சி மாற்றம் இங்கு ஏற்பட்டுள்ளதென்றாலும் இன்னும் நாடு முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

இந்தக் கட்டுப்பாட்டு நிலையைக் கொண்டுவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

## பாரத கிராம - நகர இடைவெளி

### குறைய வேண்டும் என்கிறார் : நரசிம்மராவ்

புதுடில்லி, மார்ச். 3

கிராமங்களுக்கும் நகரங்களுக்குமான இடைவெளிகள் கூடிய அளவுக்கு குறைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மனித சக்தி வள அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேச விவசாய பொறி இயல் கல்லூரியொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

அவர் அங்குதொடர்ந்து உரையாற்றும் போது; பொறி இயல் மாணவர்கள் தமது மேம்பட்ட ஆற்றலையும் அறிவையும் கிராம-நகர இடைவெளிக் குறைப்பு முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## கூட்டணியின் யோசனை இலங்கை இன்னும் பரிசீலிக்கவே இல்லை

கொழும்பு, மார்ச் 4

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து இலங்கை அரசு இன்னும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லையாம்.

இப்படி இந்திய அரசு அதிகாரிகள் தெரிவித்ததாக பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

இந்திய வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத்தின் நாடாளுமன்றப் பேச்சுக் குறித்து இலங்கை அரசு தெரிவித்துள்ள கண்டனம் பற்றி இந்திய வெளிநாட்டு அமைச்சுப் பேச்சாளர் வியப்புத் தெரிவித்தார்.

இப்படி பி ரி. ஐ. செய்திஒன்று கூறுகிறது அந்தப் பேச்சாளர் மேலும் சொன்னதாவது;

அப்பாவித் தமிழர் கொலை செய்யப்படுவதற்கு முடிவே இல்லாதது குறித்து இந்திய அரசு தனது கவலையை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்தத் தயார் என்று ஒரு பக்கத்தில் காட்டிக் கொண்டு மறுபக்கத்தில் தமிழர் மீதான அடக்குமுறையை அதிகரித்து வருகின்றது.

இப்படி அந்தப் பேச்சாளர் சொன்னார்.

### அரைகுறையாக புதைக்கப்பட்ட சடலம்

மட்டக்களப்பு, மார்ச். 4

கடந்த வியாழன் மட்டக்களப்பு, தளவாய் கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பலியான 50 வயதான கந்தையாவின்சடலம் அரைகுறையாகப் புதைக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது

துப்பாக்கிப்பிரயோகத்துக்குப் பலியான கந்தையாவின்சடலத்தை ஆயுதப் படையினர் வியாழன் எடுத்துச் சென்று இருந்தனர்.

சனியன்றுதான் சடலம் குடியிருப்புச் சுடலையில் அரைகுறையாகப்புதைக்கப்பட்ட நிலையில் உறவினர்கள் கண்டனர்.

சடலம் பின்னர் உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டது.

### வயலில் சூடடித்த அறுவர் கைது

நல்லூர், மார்ச். 4

வெள்ளிக்கிழமை இரவு முரசுமோட்டைபகுதிக்கு வாகனங்களிலும் நடைபவனியாகவும் வந்த சிறுபடையினர் அங்கு வாகனங்களை மறித்து சோதனை நடத்தினர்.

பின்னர் வயலில் சூடடித்துக் கொண்டு நின்றவர்களையும், அங்கு காவலுக்கு நின்றவர்களையும் சேர்த்து மொத்தம் ஆறு பேரைக் கைது செய்து தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

### விற்பனைக்கு

முட்டை, புரொயிலர் கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, 660, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### தங்கவேலாயுதபுரப் படுகொலை

## படை அதிகாரிகள் விசாரணை

## கேலிக் கூத்தான செயல்

### வாசுதேவ நாணயக்கார அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 4

தங்கவேலாயுதபுரம் படுகொலை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது.

இது மிகவும் கேலிக் கூத்தான செயல். உண்மையை மூடி மறைப்பதற்கே இது உதவும்.

இப்படி நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவநாணயக்காரா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை வருமாறு;-

திருக்கோயில், தங்கவேலாயுதபுரம் பகுதியில் வயல் வெளியில் சூடு மிதிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நூறுக்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்கள் அரச படையினரால் கொன்று எரிக்கப்பட்டதை அறிந்து நவசமசமாஜக் கட்சி அதிர்ச்சி அடைந்துள்ளது.

இக்கொலைகள் பற்றிய உண்மைகளை அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் வெளியிடாததையிட்டு நாம் கவலையடைகிறோம்.

லகுகல பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 40 பேர் கொலை செய்யப்பட்டவர் என்று விவரித்தது அரசு.

இதனையிட்டு விசாரணை நடத்துவதற்காக பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளை அரசு நியமித்து உள்ளது.

இது கேலிக் கூத்தானது; உண்மையை மூடி மறைப்பதற்கு இலகுவான நடவடிக்கை.

இவ்வாறுதான் சென்ற வருடம் வவுனியாவில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அண்மையில் 13 அப்பாவித் தமிழ் மக்கள் கிளிநொச்சியில் கொலை செய்யப்பட்டனர் இது சித்த சுவாதீனமற்ற ஒரு சிப்பாயினால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்று அரச தரப்பில் கூறப்பட்டது.

அந்தச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டது ஒருவர் மட்டுமல்ல என்பது யாவருக்கும் தெரிந்த விடயமாகும்.

வடக்கு, கிழக்கில் அவசியமற்ற ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் இந்த அரசின் படையினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாதுகாப்பு வலயங்கள் போன்றவற்றை பிரகடனப் படுத்தி இருப்பது மல்லாம் சில சந்தர்ப்பங்களில் பொது மக்களையும் தங்களுடன் கூட்டிச் செல்கிறார்கள். இது ஒரு பரிதாபகரமான நடவடிக்கையாகும்.

வடக்கு — கிழக்கில் இருந்து அரச படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இவற்றை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இப்படி திரு. வாசுதேவநாணயக்கரா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சனசமூக நிலையங்கள் துடிப்புடன் இயங்கவேண்டும்

### ஆண்டுக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச். 4

தமிழ் மக்கள் பல துறைகளிலும் வேதனைகளையும் சோதனைகளையும் முகம் கொடுக்கும் இக்கால கட்டத்தில் கிராமப்புற சனசமூக நிலையங்கள் உயிர்த்துடிப்புடன் இயங்க வேண்டும்.

புத்தூர் வேம்பிராய் கலைமதி சனசமூக நிலைய ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய நிலையத் தலைவர் திரு கா. கதிர்காமநாதன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

'சனசமூக நிலையங்கள் வெறுமனே அரச நன்கொடைகளை எதிர்பார்க்கும் ஸ்தாபனங்களாகவோ அல்லது பலருக்குப் பட்டம், பதவி பெற்றுத்தரும் நிறுவனங்களாகவோ இருக்கக் கூடாது.

நிலைய உத்தியோகத்தர்கள் உறுதியான கொள்கைப் பிடிப்பும், சேவை மனப்பான்மையும், கட்டுப்பாடும் உள்ளவர்களாக விளங்க வேண்டும்.' என்று திரு கதிர்காமநாதன் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

பின்னர் நடைபெற்ற புத்தாண்டு உத்தியோகத்தர் தெரிவு விவரம் வருமாறு:-

தலைவர்: கா. கதிர்காமநாதன் உபதலைவர்: ஐ. செல்லத்துரை. செயலாளர்: எஸ். கே. சந்திரசேகரன், உபசெயலாளர்: ந. செல்வராசா, பொருளாளர்: கா. மகாதேவன், உபபொருளாளர்: [illegible] கணக்காய்வாளர்: ப. குண [illegible]

## வெளிவாரிப் பட்டதாரி

### மாணவர் பரீட்சையை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடத்தக் கோரி மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச். 4

வெளிவாரிப்பட்டதாரி மாணவர்களுக்கான பரீட்சையை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடத்த உதவும்படி, இலங்கைத் தமிழ் வெளிவாரிபட்டதாரிகள் மாணவர்கள் ஒன்றியம் உயர்கல்வி ஆலோசனைச் சபை உறுப்பினர் கலாநிதி ஆ. சுந்தையாவைக் கேட்டுள்ளது.

அவருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் ஒன்றியம் கூறியிருப்பதாவது.

வெளிவாரிப்பட்டப்படிப்பு பரீட்சைகள் முன்னர் எதுவித தடங்கலும் இன்றி யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வந்தன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக [illegible] கொழும்பு பல்கலைக் [illegible] கங்களில் இப்பரீட்சை நடைபெறுகின்றது. இத[illegible]னால் யாழ் மாணவர்கள் நிம்மதியற்ற சூழ்நிலையில் அங்கு சென்று பரீட்சை எழுத வேண்டியுள்ளது. சிரமப்பட்டுப் படித்தும் பெறுபேறுகள் பாதகமாக அமைகின்றன.

படிப்பையே கைவிடும் நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படுகின்றனர். இதனால் தமிழ் மக்களின் [illegible] இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## ராமகிருஷ்ணர் ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச். 4

திருநெல்வேலி ராமகிருஷ்ணலயம் ஸ்ரீராமகிருஷ்ணர் ஜயந்தியை மார்ச் 8 ஆம், 12 ஆம் திகதிகளில் கொண்டாடவுள்ளது.

மார்ச் 8:- பருத்தித்துறை ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா திருநெல்வேலி கலாமன்றத்தில் நடக்கும் பரிசளிப்பு விழாவில் சிறப்புரை ஒன்றை நிகழ்த்துவார்.

சிவநெறிப்புரவலர் க. கனகராசா பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

மார்ச் 12:- திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தில் காலையில் இருந்து மாலை வரை பூஜை' பஜனை இடம்பெறும்.

## சூட்டுக்கு இளைஞர் பலி

மட்டக்களப்பு, மார்ச் 4

சம்மாந்துறையில் வீடியோ படம் பார்த்து விட்டுத் திரும்பியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் ஒரு தமிழ் இளைஞர் மாண்டு போனார்.

இறந்தவரின் பெயர் யோகஜீவன், வயது 24.

படம் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சமயம் ஆயுதப்படையினர் ரோந்து வந்தனராம்

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது இந்த இளைஞர் மரணமானார். மற்றவர்கள் தப்பி விட்டனர்.

புதன் இரவு இச்சம்பவம் நடந்தது.

## கொக்குவில் பகுதி தபால் விநியோகம்

### சீர் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 4

கொக்குவில் பகுதியில் தபால் விநியோகத்தை சீர் செய்யுமாறு கொக்குவில் அஞ்சல் அலுவலக விழிப்புக் குழு அஞ்சல் தொடர்புத் திணைக்களத்தைக் கோரியுள்ளது.

சனிக்கிழமை யாழ் தபால் அலுவலகத்தை வந்தடையும் கடிதம், பார்சல் ஆகியவை நான்கு நாட்கள் தாமதத்தின் பின்னரே கொக்குவில் அஞ்சல் அலுவலகத்தை சென்றடைகிறது. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்பு அடைகிறார்கள்.

கொக்குவில் அஞ்சல் அலுவலக விழிப்புக் குழுச் செயலாளர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அஞ்சல் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டு உள்ளார்.

யாழ் மருத்துவ கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, கோண்டாவில் இ. போ. ச. டிப்போ, இரு புகையிரத நிலையங்கள் உட்பட பல முக்கிய நிறுவனங்கள் அமைந்துள்ள இப்பகுதியில் தபால் விநியோகத்தில் இத்தகைய தாமதம் ஏற்படுவது மிக்க சிரமத்தை விளைவிக்கும் என்று இந்த மகஜரில்மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### இளம் பெண்ணுக்கு மரண தண்டனை

திருகோணமலை, மார்ச் 4

சம்பூர் கிராமத்தில் இளம் தமிழ் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கு இது தான் தண்டனை"-என்று எழுதப்பட்ட அட்டையும் பெண்ணின் சடலத்துக்கு அருகில் காணப்பட்டது.

முஸ்லிம் ஒருவரை திருமணஞ் செய்த இத் தமிழ்ப் பெண்ணின் பெயர் ஞானேஸ்வரி' வயது 35. கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலம், மயானத்தில் காணப்பட்டது,

கொலை என்று பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

அன்பு, பணிவு, எதற்கும் தயாரான மனப்பான்மை உள்ளவர்களின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது.

—சுவாமி விவேகானந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
கஸ்தூரியார் வீதி 22078
யாழ்ப்பாணம். 04 03 86 உ. 2 21

## அறிக்கைப் போர்!

இலங்கை — இந்திய அரசாங்கங்கள் இப்போது அறிக்கைப்போரில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. தமிழர் பிரச்சினையை மையமாக வைத்தே இந்த ராஜீகச் சண்டை தொடங்கி இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை இழுத்தடிப்பதை நிறுத்தி ஒரு மாத காலத்திற்குள் செயலில் இறங்கவேண்டும். அப்பாவித் தமிழர்களை ஆயுதப் படைகள் கொலை செய்வதை நிறுத்தவேண்டும். இந்த இரண்டு முக்கிய அம்சங்களை அடிப்படையாக வைத்து இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பகத் புதுடில்லி நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்தினார்.

அந்த உரையை அறிக்கை ரூபத்தில் கண்ட இலங்கை அரசு 'சன்னதம்'' கொள்ளத் தொடங்கி இருக்கிறது. தான் ஏதோ நேர்மையுடனும் நீதியுடனும் பாகுபாடு இன்றியும் பாரபட்சம் இன்றியும் ஆட்சி நடத்தும் தொனியில் திரு. பகத்தின் உரையைக் கண்டித்திருக்கிறது.

உள்ளதைச் சொன்னால் உள்ளம் எல்லாம் நோகிறது இலங்கை அரசுக்கு அதனைத் தனது பதில் அறிக்கையில் துலாம்பரமாக எடுத்துக் காட்டியிருக்கிறது. உண்மையைப் பூசிமெழுகும் விதத்தில் இலங்கையின் பதில் அமைந்திருக்கிறது. இதனை எவரும் இலகுவில் அவதானிக்கலாம்.

கொலைக்குற்றம் செய்தவனுக்கு நீதிமன்றத்தில் வழக்குப் பேசும் சட்டத்தரணியின் நிலையில் அந்த அறிக்கை அமைந்திருக்கிறது வார்த்தை ஜாலத்தாலும், வாதத் திறமையாலும் உண்மையை ஒழித்துவிடலாமென இலங்கை கற்பனை செய்வதையே அதன் அறிக்கை பிரதிபலிக்கிறது.

அப்பாவித் தமிழ்மக்களை ஆயுதப் படையினர் கொன்றபோது அதற்காக ஒரு சிறிதளவேனும் அனுதாபம் காட்டவில்லை யு. என். பி அரசு.

அப்படியிருக்க இந்திய அமைச்சர் சிங்கள மக்கள் கொலைசெய்யப்படுவதைக் கண்டிக்கவில்லை; தமிழர்கள் மட்டும் கொலை செய்யப்படுவதை இனப்படுகொலை என்று கண்டித்திருக்கிறார் என்று குற்றம் சாட்ட முனைகிறது.

தமிழர் என்றாலும் சரி, சிங்களவர் என்றாலும் சரி, முஸ்லிமகளானாலும் சரி உயிரின் மதிப்பு ஒன்று. ஓர் உயிரை அநியாயமாக எவர் கொன்றாலும் அவர் கண்டிக்கப்பட வேண்டியவர்; தண்டிக்கப்பட வேண்டியவர்; இதுதான் பொதுநீதி.

தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படும்போது இலங்கை அரசு அதனைக் கண்டித்ததா? அல்லது எவரையும் தண்டித்ததா? தமிழர்கள் எல்லோருக்கும் பயங்கரவாதிகள் என்று பட்டம்சூட்டி இனக்கொலைகளை நியாயப்படுத்தி வருகிறது; சட்டத்தின் துணையோடு.

இலங்கை அரசு இன்னொரு முக்கிய விடயத்தையும் மறந்துவிட்டது. உரிமைகள் வழங்கப்படாததால்தான் தமிழ் இளைஞர்கள் போராளிகளாக மாறவேண்டிய நிலை உருவானது.

அந்தப் போராளிகள் சட்டத்தை மீறும் கூட்டத்தினர் என்று சொல்லி அரசு அவர்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டுகிறது. அரசைப் பொறுத்தமட்டில் அவர்கள் சட்ட விரோதப் படையினர்.

அரசாங்கப்படை சட்டபூர்வமானது. அவ்வாறு இருக்க சட்டபூர்வமற்ற ஒரு படையினரின் செயலை வெளிநாட்டு அரசு ஒன்று கண்டிக்கவேண்டுமென எப்படி எதிர்பார்ப்பது?

இவ்வாறாக — எழுத்துக்கள் அறிக்கைகளில் ஒவ்வொருவரும் தமது பக்கத்தை நியாயப்படுத்திக்கொண்டிருக்கலாம். அவ்வாறாயின் பிரச்சினை தீர்வது எப்போது?

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு, இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்த வண்ணம் எத்தனை மாதங்கள் உருண்டோடி விட்டன? இனி அறிக்கைப் போரில் ஈடுபட்டு காலத்தைக் கடத்தும் ஒரு கைங்கரியம் நடக்கப் போகிறதா?

இனப்படுகொலை நடத்த உண்மையாகவே விரும்பாவிடில், அரசியல் தீர்வு காண்பதே உள்ளார்ந்த விருப்பமெனில் பிரச்சினையின் ஆணிவேரைப் பிடுங்கி எறிய வேண்டும்.

தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில், விட்டுக் கொடுக்கும் மனவிருப்பத்துடன், நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டாக வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லோருக்கும் நல்லது.

ஒருவன் தன்னுடைய தவறு என்ன என்பதனைக் கண்டுபிடித்துத் திருந்திக் கொண்டால் பகைமைக்கு இடம் கிடையாது. இதனை இலங்கை அரசு உணர்ந்து நடக்குமானால் எல்லாம் நல்லதாக முடியும்.

அதனை விடுத்து, இந்தியாவுடன் அறிக்கைப் போரிலும்; விதண்டா வாதத்திலும் ஈடுபட்டு யாருக்கு என்ன பயன்?

எமக்கு அருகே உள்ள மிகப் பெரிய செல்வாக்கு நிறைந்த புண்ணிய பூமி இந்தியா. அங்கிருந்துதான் இலங்கை வாழ் தமிழர்களும், சிங்களவர்களும் வந்து குடியேறினோம். அதனோடு பகைத்து நாம் எதனைச் சாதிக்க முடியும்?

இதனைச் சற்று நிதான புத்தியுடன் ஆற அமர இருந்து சிந்தித்துப்பார்க்க வேண்டும் இலங்கை அரசு.

★ காலபோகம்

# விசுவமடுப் பகுதியில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை

## விவசாயிகளுக்கு பெருநஷ்டம்

விசுவமடு, மார்ச். 4

விசுவமடுப் பகுதியில் கடந்த காலபோக வேளாண்மை அறுவடைக் காலம் ஆரம்பமாகியுள்ளது. இம்முறை எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லையெனவிவசாயிகள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இம்முறை காலபோக நெற் செய்கையின்போது மழை காரணமாக அநேகமான நெல் வயல்களில் அழிவு ஏற்பட்டது.

பின்னர் இரண்டாம் தடவையாக நெல்லை விதைத்தே பலரும் தங்கள் வேளாண்மையை மேற்கொண்டனர்.

இதன்காரணமாகவும், டீசல் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு ஆகியவற்றினாலும் இம்முறைவேளாண்மையின்போது வழமையான செலவிலும்பார்க்கக் கூடுதலான செலவு விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

இதேவேளை அறுவடையான நெல்லின் விலையும் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆரம்பத்தில் மூடை ஒன்று ரூபா 350 முதல் 375 வரை வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டபோதும் தற்போது மூடை ஒன்று ரூபா 250 முதல் 260 வரையே கொள்வனவு செய்யப்படுகிறது

இதன்காரணமாக இம்முறை வேளாண்மை பலருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.



### பொய்யாமொழி

குறள்:

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாஞ்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.

பொருள்:

அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச் சொற்கள் இன் சொற்களாகும்.

## காளி கோயில் திருப்பணிவேலை

ஊர்காவற்றுறை, மார்ச் 4

கரம்பன் கிழக்கு காளி கோயிலில் விரைவில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

கோயில் பரிபாலன சபையினர் இது தொடர்பாக கூடி அண்மையில் முடிவு செய்தனர்.

கொழும்பில் உள்ள இந்தக்கோயில் அபிமானிகள் சிலர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியால் நிதி சேர்க்கப்பட்டுள்ளது. உள்ளூரிலும் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கோயிலின் வெளிமண்டபம், சுற்றுப்பிரகாரம் ஆகியன புதுப்பொலிவுடன் திருத்தியமைக்கப் படவுள்ளன.

## அகதிகள் புனர்வாழ்வுத் திட்டம்; பாடசாலைகள் பெரும் ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.4

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்துக்கு வட பிரதேச பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களின் ஒத்துழைப்பு பெருமளவு கிடைத்துள்ளது.

யாழ் இந்து மகளிர் கல்லூரி புனர்வாழ்வு நிதியத்துக்கு ரூபா 13,052—50 வழங்கியுள்ளது.

அதேவேளை தெல்லிப்பளை மகாஜன கல்லூரி 22 ஆயிரத்து 500 ரூபாவை இந்த நிதியத்துக்கு வழங்கியிருக்கிறது.

மேலும் பல பாடசாலைகள் இந்த நிதியத்துக்கு நிதி உதவி வழங்க முன் வந்து உள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம், பிரசார இயக்குநர் திரு. ஆ. கனகசபாபதி ஆகியோர் இப்பிரதேச பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அகதிகளின் அவலத்தினையும், புனர்வாழ்வு அவசியத்தையும் வலியுறுத்தியதனால் இத்தகைய ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

இக்கழகத்தினர் சென்ற வெள்ளி அச்சுவேலியில் உள்ள தமிழ் மகாவித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், சென்திரேசா மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்து இத்தகைய வேண்டுகோளை விடுத்தனர்.

மீன்பிடிக்க தடை உத்தரவு

# மீனவர் வறுமை நிலைக்கு தள்ளப்படும் அபாயம்

## கடற்பிரதேசம் வெறிச்சோடிக் கிடக்கிறது

காங்கேசன்துறை,மார்ச்4

கடலை நம்பி தொழில் செய்து வாழ்க்கையை நடத்திய பல ஆயிரம் மீனவர்கள் கடலில் கால் வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் வறுமை நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

கடலில் மீன்பிடிக்க விடுக்கப்பட்ட தடை உத்தரவையடுத்து காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி கடல் பிரதேசம் கடந்த சில தினங்களாக வெறிச்சோடிக் காணப்படுகிறது.

தினமும் பெருமளவு மீன் பிடிக்கப்படும் இப்பகுதியில் வள்ளங்களையோ, மரக்கலங்களையோசிறு தொழில்செய்யும்மீனவர்களையோ எதனையும்காணமுடியவில்லை.

மேற்படி தடை உத்தரவையடுத்து கடற்பகுதியில் அடிக்கடி பீரங்கி வேட்டுக்கள்தீர்க்கப்படுவதாலும் ஹெலிக்கொப்டர் கண்காணிப்பு இடம்பெறுவதாலும், கடற்படையினரின் ரோந்து அதிகரித்துள்ளதாலும் மீனவர்கள் கடலில் கால் வைக்கவே அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன் பிடித்தொழில் தடைப்பட்டதன் காரணமாக மீனுக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சந்தைகளில் மீனைக்காண முடியவில்லை.

ஆசிரியர்களுக்கு

## அகதி நிவாரண கடன் விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்4

ஆசிரியர்களுக்கு அகதி நிவாரண கடன் வழங்குவது தொடர்பான விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கடன் வழங்குவது தொடர்பாக யாழ். கல்வித்திணைக்களம் கையாண்ட நடைமுறைகளுக்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் வன்மையாக ஆட்சேபனை தெரிவித்து உள்ளது.

தமது ஆட்சேபனையை வடமாகாண ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வே. சிவராசா பின்வருமாறு உதயனிடம் விளக்கினார்:-

'கல்வித்திணைக்களம் வன்செயலால் பாதிப்படைந்த ஆசிரிய ஆசிரியைகளுக்கு இரண்டு வருட சம்பளத்தை கடனாக வழங்க இருப்பதாக அறிகிறோம்.

இத்தகையகடன் வசதிகளையும் அவற்றைப் பெறும் நடைமுறைகளையும் கல்வித்திணைக்களம் ஒரு சுற்று நிருபம் மூலம் பாடசாலை அதிபர்கள் ஊடாக ஆசிரியர்களுக்கு அறிவிப்பது சாதாரண நடைமுறை.

இந்தக் கடன் வசதி பற்றி எவ்வித சுற்று நிருபமும் இதுவரை பாடசாலைகளுக்கு அனுப்பப்படவில்லை. யாழ். கல்வித் திணைக்களம் இந்த நடைமுறையை மீறி உள்ளது.

இந்த நிலையில், இக்கடன் வசதிக்கான விண்ணப்பத் திகதி முடிவடைந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது. இது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் அவலத்தை மேலும் மோசமாக்கி உள்ளது.

எனவே வன்செயலால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் கடனுதவி விண்ணப்ப முடிவு திகதியை மேலும் நீடிப்பதுடன், இக்கடன் விவரத்தை ஒரு சுற்று நிருபம் மூலம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கும்படியும் யாழ் கல்வித்திணைக்களத்தைக் கோரியுள்ளோம்.'

இவ்வாறு திரு. சிவராசா உதயனிடம் விளக்கிக் கூறினார்.

## 108 ஆலயங்களில் கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம். மார்ச், 4

கச்சியப்ப சிவாச்சாரியாரின் திருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நூற்றியெட்டு சைவ ஆலயங்களில் பத்துத் தினங்கள் கந்தபுராணப் பாராயண வழிபாடு நடைபெற்றது.

யாழ் சித்தாந்த சேவையினரால் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது, நல்லூர், வண்ணார் பண்ணை, கொக்குவில், திருநெல்வேலி, அரியாலை ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் இவ்வழிபாடு ஒழுங்கு செய்யப்பட்டது.

''நீதியும் தருமம் சிறந்து விளங்கவே இவ்வழிபாடு நடைபெற்றது'' என்று யாழ் சைவ சித்தாந்த சேவை இயக்க சேவையாளர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை உதயனுக்கு தகவல் வெளியிட்டார்.

## கொள்ளைபோனபணம்; அரசாங்க அதிபரே செலுத்தவேண்டும்

பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

மட்டக்களப்பு, மார்ச். 4

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 19ம் திகதி மட்டக்களப்பு கச்சேரியில் கொள்ளையடிக்கப்பட்டபணத்தை அதற்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் செலுத்த வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை உள்நாட்டலுவல்கள் அமைச்சு [illegible] அரசாங்க அதிபருக்கு [illegible].

கொள்ளையடிக்கப்பட்ட பணம் சுமார் 78 ஆயிரம் ரூபாவும் விமானப் படை சுற்றுலா காணி சுவீகரிப்பு நஷ்ட ஈடுக்காக வழங்கப்பட்ட பணம் ஆகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட இருக்கையில் இப்பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு பகுதியில் அரசாங்க உடைமைகளுக்கு ஏற்படும் சேதத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரியே ஏற்க வேண்டுமென அரசாங்கம் ஏற்கனவே அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களினால் முடியாதது ஒன்றுமில்லை

### இளைஞர் சேவை அதிகாரி உரை

கிளிநொச்சி, மார்ச்.4

''முடியாத ஒன்று இளைஞருக்குக் கிடையாது. இளைஞர்கள் மாபெரும் சக்தி படைத்தவர்கள். இச்சக்திகள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். இளைஞர்களிடையே போட்டி இருக்கலாம் பொறாமை இருத்தல் கூடாது.

இவ்வாறு கடந்த 24ம் திகதி இராமநாதபுரத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றப் பொருட்காட்சி ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ். தர்மசீலன் தமது உரையில் குறிப்பிட்டார்.

இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் இராமநாதபுரம் இளைஞர் சேவை மன்றத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் இப் பொருட்காட்சி நடைபெற்றது. திரு. தர்மசீலன் மேலும் கூறியதாவது:-

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். இவர்களை நல்வழிப்படுத்தி ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வழிகோலுவது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணியாகும்.

இளைஞர்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலிலும் செய்து முடிப்போம் என்ற மனத்துணிவுடன் ஈடுபட வேண்டும். ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தமது கலை, கலாசாரம் என்பன முன்னேறவும் பாடுபட வேண்டும் என்றார்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அதிகாரி திரு. பொன் நித்தியானந்தம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் பொருட்காட்சிகள்கிராம மட்டத்தில் மட்டுமல்லாது நகர மட்டத்திலும் நடத்தப்பட வேண்டும்; அப்போது தான் கிராம மட்டத்தில் இருப்பனவற்றை நகர மட்டத்திற்கு அறிமுகம் செய்ய முடியும் என்றார்.

கிளிநொச்சி தேசிய இளைஞர்சேவை அதிகாரி கே. பரராசசேகரம் - இராமநாதபுரம் வட்டக்கச்சி விசேட சேவை உத்தியோகத்தர் ஐ. சிவராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விமானக் குண்டுவீச்சு

## உண்மையை உலகுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை

### ஜனாதிபதிக்கு கண்டனச் செய்தி

சுன்னாகம், மார்ச். 4

தமிழ் மக்கள் மீது விமானத் தாக்குதல்கள் இடம் பெறுவதை எந்த தேசபக்தர்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். சாதாரண பொதுமக்கள் மீது அரச படைகள் விமானத்தில் வந்து குண்டு வீசி மக்களைக் கொல்வதை நாம் பகிரங்கமாகக் கண்டிக்கின்றோம்.

குண்டு வீச்சில் சைவ மக்களின் புனித மதகுரு ஒருவர் கொல்லப்பட்டதையும் நாம் தங்கள் கவனத்துக்கு சமர்ப்பிக்கின்றோம்.

நீங்களும் அரசும் எந்த நொண்டிச் சாட்டுக்களை கூறி விமானத் தாக்குதல்களை நியாயப்படுத்த முனைந்தாலும் தமிழ் மக்களை முழுமையாகக் கொன்றொழிக்கவே அரசு விமானக் குண்டு தாக்குதல்களை தமிழ் மக்கள் வாழும் பகுதியில் நடத்துகிறது என்றஉண்மையை உலகுக்குத் தெரியப்படுத்த சுன்னாகம் பிரஜைகள் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வார்கள்'

– இப்படி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கண்டன தீர்மானச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

சுன்னாகம் பிரஜைகள் குழு 1. 3. 86ல் நடத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக எடுத்த தீர்மானத்திற்கிணங்க தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் ஜனாதிபதிக்கு அனுப்பிய தந்திச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

கிளிநொச்சியில்

## 3 திணைக்களப் பிரிவுகள் தனித்து இயக்கம்

கிளிநொச்சி, மார்ச், 4

இதுவரை காலமும் யாழ் மாவட்டத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த கிளிநொச்சிப் பகுதிகளுக்கான சிறுகைத்தொழிற் பிரிவு தனித்து இயங்க ஆரம்பித்துள்ளது.

இதேபோல் சமூக சேவைப் பிரிவு, புனர்வாழ்வுத் திணைக்களம் ஆகியவையும் தனித்து இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் கிளிநொச்சி மாவட்ட சிறுகைத் தொழில் பகுதி, சமூக சேவைப் பகுதி ஆகியவற்றிற்கு உதவி அத்தியட்சகராகவும் புனர்வாழ்வு அமைச்சின் உதவி ஆணையாளராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுகைத்தொழில் வேலைகள் துரிதப்படும் எனவும், புனர்வாழ்வு நடவடிக்கைகளை தீவிரப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மோட்டார் வாகன லைசென்ஸ் பெறும் தினம்

### மார்ச் 14 வரை நீடிப்பு

யாழ்ப்பாணம். மார்ச், 4

மோட்டார் வாகனங்களுக்கான 1986ம் ஆண்டுக்குரிய லைசென்ஸ் பெறும் கடைசித் திகதி மார்ச் 14 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டினதும் அதற்கு முந்திய ஆண்டுகளினதும் லைசென்ஸ்களைச் சமர்ப்பிக்காமலே 1986 ஆம் ஆண்டுக்கான லைசென்ஸைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சலுகையும் மார்ச் 14 வரை நீடிக்கப் பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மார்ச் 14க்குப் பின்னர் ஜூன் 30 ஆம் திகதி வரை லைசென்ஸ் எடுப்பவர்கள் 10 சதவீதம் தண்டப்பணம் செலுத்த வேண்டும்.

30-6-86 இல் இருந்து 31-12-1986 க்குள் லைசென்ஸ் பெறுபவர்கள் 20 சதவீதம் தண்டப் பணம் செலுத்த வேண்டும்,

இப்படி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BECON
(ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக)
SPOKEN ENGLISH
BY
Mr. Reginold
ஆரம்பம்: 5 . 3 . 86
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# உதயன்

04. 03. 1986

BECON
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)
சனி — ஞாயிறு
விலங்கியல்: திரு. தம்பிராஜா
86 A/L விலங்கியல் 11.30
87 A/L விலங்கியல் 12.30
88 A/L விலங்கியல் 1.30
பௌதிகம்: திரு யோகேந்திரா
ஒளியியல் — 7-30 நிலையியல் — 8.30
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## விளையாட்டரங்கு

★ கல்லூரி கிரிக்கெட்

## ஆட்டங்கள் அனைத்திலும் வெற்றியீட்டிய மத்திய கல்லூரி

### சோதனைக்கு மத்தியில் சாதனைபுரியும் வீரர்கள்

— விளையாட்டுச் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 4
கல்லூரி கிரிக்கெட் அணிகளை அறிமுகப்படுத்தும் வரிசையில் இன்று இடம் பெறுவது யாழ். மத்திய கல்லூரி அணி.

மத்திய கல்லூரி அணி இந்தப் பருவ காலத்தில் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்றுமா என்பது இறுதி வரை கேள்விக் குறியாகவே இருந்து வந்தது,

மக்கள் நெருங்கவே அஞ்சும் கோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் கல்லூரியின் பயிற்சி மைதானம் அமைந்திருந்ததும் —

பயிற்சி வசதியற்ற நிலையில் கிரிக்கெட் ஆட்டங்களில் கலந்து கொள்ள முடியாது என்பதாலும் இப்படிக் கருதப்பட்டது.

இருந்தும் சம்பந்தப்பட்டவர்கள் எடுத்த தீர்க்கமான — பாராட்டத்தக்க- முடிவினால் ஒரு சிறந்த அணி மிகுந்த கஷ்டத்திற்கு மத்தியில் உருவாக்கப்பட்டது,

பாடசாலைக்குள் ஒரு சிறிய இடத்தில் மட்டுமே பயிற்சி பெற்ற நிலையில் தற்போது சாதனை புரிந்து வருகிறார்கள் மத்திய கல்லூரி வீரர்கள்.

கடந்த வருடங்களில் மைதானத்தில் பெற்ற பயிற்சியுடனேயே அவர்கள் திறமையாக விளையாடி வருகிறார்கள்.

இந்த பருவத்தில் ஓரிரு நாட்கள் பெற்ற பயிற்சியுடன் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டிகளில் ஆடத் தொடங்கிய மத்திய கல்லூரி அணி, இது வரை ஆடிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் இந்தப் பருவ காலத்தில் இது வரை எந்த அணியுடனும் தோல்வி அடையாத ஒரே அணி என்ற பெருமையையும் பெற்றிருக்கிறது.

அணியில் சாதனை படைத்துவரும் வீரர்கள்;



கே. ராஜசேகர்

அணித் தலைவர் கே. ராஜசேகர்: இந்த அணிக்காக மூன்றும் வருடமாக விளையாடும் பல்துறை வல்லுநர். வலது கை பந்து வீச்சாளர், வலது கை துடுப்பாட்ட வீரர். மத்திய கல்லூரியின் நம்பிக்கை நட்சத்திரங்களுள் ஒருவர்.

ஜி. ரெரிமகான்;- அணியின் உபதலைவர், வலது கை துடுப்பாட்ட வீரர். ''லெக் பிறேக்'' எனும் சுழல் பந்து முறையில் அபாரமாக பந்து வீசும் இவர் மூன்றும் வருடமாக ஆடுகிறார். சிறந்த பந்து தடுப்பாளர் மத்திய கல்லூரி அணி இவரிடமிருந்து அதிகம் எதிர்பார்த்திருக்கிறது.

எஸ். விஜயநாதன்:- அணியின் ஆரம்ப இடது கை பந்து வீச்சாளர், வலது துடுப்பாட்ட வீரர், மூன்றும் வருடமாக ஆடும் அனுபவம் நிறைந்த வீரர்.

இ. பிரபாகரன்:- அணியின் விக்கெட் காப்பாளர். வேகமாக ரன்களைக் குவிக்கும் வலது கை துடுப்பாட்ட வீரர். இவரும் இந்த அணிக்காக மூன்றும் வருடமாக விளையாடுகிறார்.

கே. விவேகானந்தன்:- அணியின் ஆரம்ப இடது கை துடுப்பாட்ட வீரர், வலது கை பந்து வீச்சாளர். இவ்வருடம் இது வரை நடைபெற்ற கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் ஆகக் கூடுதலான ஓட்டங்களாக 96 ஓட்டங்களை சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிராகப் பெற்றவர்.

கே. கலாவண்ணன்:- அணியின் மற்றைய ஆரம்ப வலதுகை துடுப்பாட்டக்காரர், வலதுகை பந்து வீச்சாளர், சிறந்த பந்து தடுப்பாளர். இவரிடமிருந்து பல சாதனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஏ. சிவச்சந்திரன்:- வலதுகை துடுப்பாட்டக்காரர், வலது கை பந்து வீச்சாளர். திறமையாக பந்து தடுப்பவர் என்று விமர்சிக்கப்படுபவர்.

மேற்குறிப்பிட்ட மூவரும் இந்த அணிக்காக இரண்டாம் வருடமாக ஆடுபவர்கள். இனி வரும் ஏனையவர்கள் அணிக்கு புதுமுகங்கள்.

எம். மத்தியூ:- வலது கை துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து தடுப்பாளர்.

பி. முரளிதரன்:- அணியின் வலது கை ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர், வலது கை துடுப்பாட்ட வீரர்.

ஆர். இராஜ்குமார்:- மைதானத்தின் எந்தப் பகுதியிலும் திறமையாக பந்து தடுக்கும் இவர் ஒரு வலது கை துடுப்பாட்ட வீரர் ஆவார்.

பி. பிரேம்குமார்:- வலதுகை துடுப்பாட்ட வீரர். சிறந்த பந்து தடுப்பாளர்.

கே. இரமணநாதன்:- இடதுகைப் பந்து வீச்சாளர், இடது கை துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து தடுப்பாளர் என்று கருதப்படுபவர்.

எஸ் ரமேஸ்:- வலது கை பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர், திறமையான பந்து தடுப்பாளர்.

எஸ். எமில் ஜாக்ஷன்:- அணியின் பதில் விக்கெட் காப்பாளர், வலது கை துடுப்பாட்டக்காரர்.

ஏ. இரத்தினராஜா:- வலதுகை துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து தடுப்பாளர்.

தொடர்ந்து வெற்றிகளை ஈட்டி வரும் மத்திய கல்லூரி அணியின் பொறுப்பாசிரியராகவும், பயிற்சியாளராகவும் திரு. கே. கெங்கேஸ்வரன் கடமையாற்றுகிறார்.

ஐந்தாவது வருடமாக

## சென்றலைட்ஸ் கேடய கிரிக்கெட் போட்டி

### மென்பந்து ஆட்டமும் சூடுபிடிக்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 4
சென்றலைட்ஸ் வெற்றிக் கேடயத்திற்காக, சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

ஐந்தாவது ஆண்டாக இச்சுற்றுப் போட்டி நடைபெறுகிறது இந்தச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் யாவும் சித்திரை, வைகாசி மாதங்களில் வாராந்தம் சனி, ஞாயிறு தினங்களிலும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் நடைபெறும்.

சென்றலைட்ஸ் வெற்றிக் கேடயத்தை 1982, 1984ஆம் ஆண்டுகளில் அரியாலை விளையாட்டுக் கழகமும் 1983, 1985ஆம் ஆண்டுகளில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சுவீகரித்தன என்பது குறிப்பிடத்தக்கது

இரு இன்னிங்ஸ் கொண்ட ஆட்டங்களாக நடைபெறும் இந்தப் போட்டிகளில் யாழ் மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் யாவும் பங்குபற்றலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றுப் போட்டியின் விண்ணப்பங்கள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் கழக அணிகள் ''செயலாளர், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், 29 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன.

வழமைபோல இந்த வருடமும் சென்றலைட்ஸ் கேடயச் சுற்றுப் போட்டியைத் தொடர்ந்து மென்பந்து கிரிக்கெட் யாழ் நகரில் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஸ்ரீமுருகன் அணி சாம்பியனானது

யாழ்ப்பாணம், மார்ச் 4
நேற்று முன்தினம் நடைபெற்ற எல்லை இறுதி ஆட்டத்தில் சரவணை திருவள்ளுவர் அணியை வேலணை ஸ்ரீ முருகன் அணி 16 க்கு 6 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சாம்பியனானது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட எல்லே போட்டிகளின் இறுதிப் போட்டியே நேற்று முன்தினம் நடைபெற்றது.

புங்குடுதீவு பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கான ஒழுங்குகளை வேலணை விளையாட்டு அதிகாரி திரு கே பீலிக்ஸ் செய்திருந்தார்.

இந்தப் போட்டிக்கு நடுவராக திரு எஸ் தாரீஸியஸ் கடமையாற்றினார்.

மன்னார் சம்பவம்

## 4 முஸ்லிம் பெண்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

நல்லூர், மார்ச் 4
கடந்த (பெப்ரவரி) மாதம் 25ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலின்போது சிருடையினர் நடத்திய பதில் தாக்குதல்களினால் காயமடைந்த நான்கு முஸ்லிம் பெண்கள் நேற்று யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் விவரம் வருமாறு:-

★ பாத்திமா பீபீ 14 வயது.

இவருக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடந்த வேளை கிணற்றடியில் நின்ற பொழுது கிணற்றடிக்கு அருகாமையில் ஒரு குண்டு வந்து விழுந்து வெடித்ததால் இவருக்கு காயம் ஏற்பட்டது.

★ ஆலா அந்தோனியா வயது 34. பள்ளிமுனையை சேர்ந்தவர். இவருக்கு தலையிலும், காலிலும், இடுப்பிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

வீட்டுக் குசினிக்குள் இருந்த பொழுது குசினிக்கு அருகாமையில் ''ஷெல்''விழுந்து சிதறியதால் இவருக்கு காயங்கள் ஏற்பட்டன.

★ கமால் பஷ்யா செய்த்தூன் 35 வயது. இவருக்கு நெஞ்சிலும் இரண்டு கைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

★ க. பதுர்நிஷா 12 வயது. இவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

## பர்மிய மீனவர்கள் கோட்டை முகாமில்

நல்லூர், மார்ச் 4
கடந்த வெள்ளிக் கிழமை தாளையடி முனை கடலில் கரை ஒதுங்கிய நான்கு பர்மிய மீனவர்களும் நேற்று கோட்டை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்களை வடமராட்சி வட - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை வேலும் மயிலும் நேற்றுக் காலை பத்து மணியளவில் யாழ் அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தார்.

அதன் பின்னர் இந்த நான்கு மீனவர்களையும் யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. த. குலசேகரம் கோட்டை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்று இராணுவ உயர் அதிகாரிகளிடம் கையளித்தார்.

இவர்கள் நான்கு பேரும் இன்று அல்லது நாளை பலாலி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப் படுவார்கள் எனச் சொல்லப்படுகிறது.

தங்கவேலாயுதபுரம் படுகொலை

## கண்டனம் தெரிவித்து வடக்கில் பேரணி

நல்லூர், மார்ச் 4
அக்கரைப்பற்று தங்கவேலாயுதபுரம் பகுதியில் தமிழ் விவசாயிகள் சிருடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக்கண்டித்து நீர்வேலி, புத்தூர் பகுதிகளில்ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது

இப் பேரணியை கிராமிய தொழிலாளர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளும், தொழிலாளர்களும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

கடந்த ஞாயிறன்று நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமான இப்பேரணி விவசாய மக்கள் வாழும் பகுதிகள், தோட்டங்கள் ஊடாகச் சென்று இறுதியில் புத்தூர் சிவன் கோயிலடியில் நடைபெற்ற கூட்டத்துடன் நிறைவு பெற்றது

இப்பேரணியில் கலந்து கொள்வதற்காக கைதடியில் இருந்து நீர்வேலிக்கு விவசாயிகளை ஏற்றி வந்த லொறி ஒன்றின் மீது ஹெலிக்கப்டர் விமானம் தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

தெய்வாதீனமாக இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ் ஆஸ்பத்திரி அலுவலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்க அலுவலகம் நாளை 5ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இந்த அலுவலகம் வெளி நோயாளர் பகுதி ரோட்டரிக் கழக கட்டடத்தில் அமைந்திருக்கிறது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் அலுவலகத்தை திறந்து வைப்பார்.

வைத்திய கலாநிதி ஜெகா பசுபதி மங்கள விளக்கேற்றுவார்.

ஓய்வு பெற்ற அரச அதிபர் திரு எஸ். சிவஞானம், வைத்திய கலாநிதி எஸ். சிவகுமாரன், அருட் திரு. பிரான்சிஸ் டானியல், அல்ஹாஜ் மௌலவி கே. எம். காஸிதீன், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர [illegible] பரமாச்சாரியசுவாமிகள், [illegible] பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

### கடற்கண்ணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுவான் கரையை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர்.

ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் நயினாதீவு, நெடுந்தீவுப் படகுச் சேவைகள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டன.

பயணிகள் யாழ்ப்பாணம் நோக்கித் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பீதி காரணமாக புங்குடுதீவு கரையோரப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.

கடற்கண்ணி வெடிக்குச் சிக்கி கடற்படைக் கப்பல் ஒன்று பயங்கரமாகச் சிதறியது இலங்கைக் கடற்படைச் சரித்திரத்தில் இதுவே முதல் தடவை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் நேற்று ஒப்புக்கொண்டன.

பாதுகாப்பு வட்டாரங்களின் படி 2 கடற்படைச் சிப்பாய்கள் மரணமானார்கள் என்றும் 3 பேர் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது

#### போக்குவரத்து நிறுத்தம்

புங்குடுதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் இருந்து மக்கள் யாழ்ப்பாணம் வருவதைப் பொறுத்தே [illegible] இருந்து தீவுப் பகுதி [illegible] போக்குவரத்துச் சேவை இடம்பெறும் என்று கூறப்படுகிறது.

நயினாதீவு, புங்குடுதீவு,

## கரடிப்போக்கில் கடும் தேடுதல்

### இளம் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, மார்ச் 4
சுமார் ஏழு கவச வாகனங்களில் நேற்று கரடிப் போக்குப் பகுதிக்குச் சென்று தேடுதல் நடத்திய சிருடையினர் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

இவரது சடலம் கவச வாகனம் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கொலையுண்டவர் கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

கரடிப்போக்கில் உள்ள தனது வயலுக்குள் இவர் நுழைந்த போது சிருடையினரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார்.

அப்பகுதியில் சிருடையினர் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைதீர்த்தவண்ணம் தேடுதல் நடத்தினர்.

இதேவேளை ஆனையிறவில் இருந்து பிரயாணிகளுடன் சேர்ந்து மூன்று பஸ்களில் வந்த சிருடையினர் பரந்தன் பகுதியில் கடும் தேடுதல் நடத்தினர்.

இதனால் வாகனப் போக்கு வரத்துக்கள் தடைப்பட்டன.

இதேசமயம் நேற்று ஆனையிறவு தடைமுகாமில் பஸ் பிரயாணிகள் உட்பட சகல வாகனங்களும் வழமையிலும் பார்க்க மிகவும் கடுமையாக சோதனையிடப்பட்டன. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட பிரேதம் ஒன்றும் கிளிநொச்சி முகாமிற்கு முன் வழி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

### வேதனை தரும் செய்தி

கிளிநொச்சி, மார்ச்.4
சிருடையினரால் மானபங்கப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண்மணி ஒருவர் நேற்று முன் தினம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தப் பெண்மணி பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேற்படி பெண் ஐந்து குழந்தைகளுக்குத் தாய் என்றுகூறப்படுகிறது.

பிரஸ்தாப பெண் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்தவர்.

### வலி வடக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பறந்தவாறு கீழ்நோக்கி வேட்டுக்களைத்தீர்த்தது.

வறுத்தலைவிளான், தெல்லிப்பளை, சட்டுவன், பகுதிகளில் ஹெலிக்கொப்டர் மிகப்பதிந்தும் சரிந்தும் வேட்டுக்களைப் பொழிந்தது.

வறுத்தலைவிளானில் — முன்னர் — கேர்ணல் ஆரியப் பெருமாவைப் பலி கொண்ட அதே இடத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்து ஏவப்பட்ட 'ஷெல்' குண்டு ஒன்று விழுந்து வெடித்தது.

ஷெல்லில் இருந்து புறப்பட்ட குண்டு ஒன்று வீதியில் பாரிய கிடங்கு ஒன்றை ஏற்படுத்தியதுடன் அருகில் இருந்த கல் நெரிக்கும் ஆலையின் மதில் சுவரில் நான்கு அங்குல விட்டமான ஓட்டையை ஏற்படுத்தியது.

மின் வயர்கள் அறுந்து சிதறிக் கிடந்தன. மரக் கொப்புக்கள் முறிந்து விழுந்து கிடந்தன.

கட்டுவனில் உள்ள சித்தியம்புளியடிக் கிராமத்திலும் ஒரு 'ஷெல்' விழுந்து வெடித்தது. பனை வடலி ஒன்றில் இக் குண்டு விழுந்ததால் மரங்கள் முறிந்தன.

கட்டுவன், குரும்பசிட்டி, மயிலிட்டி, தெல்லிப்பளைப் பகுதிப் பாடசாலைப் பிள்ளைகள் தம்மைப் பாதுகாக்கவும் பயத்தாலும் சிதறி ஓடினர்.

ஒரு மணித்தியாலமாக கடுமையான பீதியை ஏற்படுத்திய ஹெலிக்கொப்டரினை நோக்கி வறுத்தலைவிளானில் இருந்து 'ரொக்கட்' ஏவப்பட்டது.

இதனால் அது விமான நிலையத்தை நோக்கி விரைந்ததாகக் கூறப்படுகின்றது.

மயிலிட்டிச் சந்திக்கு அப்பால் சிருடையினரை முன்னேற விடாது போராளிகளால் கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பிற்பகல் 1 மணி வரைக்கும் ஆங்காங்கே கைக்குண்டு வெடிச் சத்தங்கள் கேட்டபடியே இருந்தன.

ஆங்காங்கு போராளிகள் ஆயுதங்களுடன் காவல் புரிந்ததைக் காண முடிந்தது.

நேற்றைய சம்பவத்தை அடுத்து வலி வடக்குப் பகுதியிலிருந்து மக்கள் அச்சத்தால் முடை முடிச்சுக்களுடன் சுன்னாகம், கந்தரோடை, மானிப்பாய் ஆகிய பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

### ஓய்வூதியம் வழங்கப்படும் நாட்கள்

யாழ்ப்பாணம், மார்ச்,4
தபால் கந்தோர்கள் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கு மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவு யாழ் விளையாட்டரங்கில் வைத்து கீழ்க்கண்ட திகதிகளில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- மார்ச் 13: அளவெட்டி, அச்சுவேலி, காரைநகர், வேலணை, சங்கானை.
- மார்ச் 14: யாழ்ப்பாணம், சுழிபுரம், கொடிகாமம்.
- மார்ச் 17: நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை.
- மார்ச் 18: பருத்தித்துறை, கொக்குவில், காங்கேசன்துறை.
- மார்ச் 19: வட்டுக்கோட்டை, வயாவிளான், மானிப்பாய், உரும்பராய்.
- மார்ச் 20: கரவெட்டி, வல்வெட்டித்துறை, கைதடி. வண்ணார்பண்ணை.
- மார்ச் 21: சாவகச்சேரி, சுன்னாகம், பண்டத்தரிப்பு.
- மார்ச் 24: தெல்லிப்பளை, கோப்பாய், யாழ்ப்பாணம்.

### இரவிர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் பீரங்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமே இருந்தன.

கடற்கண்ணியில் சிக்கி இறந்த கடற்படைச் சிப்பாய்களின் சடலங்களைத் தேடும் வேலையும் இரவு 9 மணிவரை நடந்ததாகச் சொல்லப்பட்டது

பல வீடுகள் தீக்கிரையானதாக ஆகப் பிந்திக் கிடைத்த ஊர்ஜிதம் செய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன.

### சிங்கராயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹில்டன் பெரேரா ஆகியோர் கூறிய சாட்சியங்களை நீதிபதி நிராகரித்துவிட்டார். பொலீஸ் அதிகாரிகள் புண்ணியா டி சில்வா, சந்திரா மென்டிஸும் தெரிவித்த சாட்சியங்களை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

அரச தரப்பில் திரு. சி. ஆர். டி. சில்வா ஆஜரானார். வண. பிதா சிங்கராயர் தரப்பில் சட்டத்தரணி பாலாதம்பு ஆஜரானார்.

நெடுந்தீவுப் பகுதிகளில் பல படகுகள் தீக்கிரையாகின.

எனினும் பதில் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி விவரமான தகவல் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

### இலவச காப்புறுதி

கொழும்பு, மார்ச்.4
ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களுக்கு இலவச ஆயுட் காப்புறுதித் திட்டம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதனால் பல லட்சம் தனியார்துறை ஊழியர் நன்மை அடைவர். இந்தத்திட்டம் அரசாங்க ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஊழியர் நம்பிக்கை நிதியமும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் சேர்ந்து இத்திட்டத்தை அமுல் செய்துள்ளன.

### தவறிவிட்டது

கிட்டத்தட்ட 5000/- மேல் இன்று (3 - 3 - 86) நண்பகல் யாழ் மாநகர எல்லைக்குள் தவறிவிட்டது தயவு செய்து கண்டெடுத்தவர் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். J. E. இராஜநாயகம், 55, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். அல்லது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 330, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 04-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60/N/86

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org